சாதி ஒழிப்பே ! சமூக விடுதலை !




# ஆதித்தமிழர் பேரவை

தமிழ்நாடு

# AATHITHAMIZHAR PERAVAI

TAMIL NADU

நாள் :

## -பத்திரிக்கை செய்தி-

1. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கடந்த நாடாளுமன்ற தேர்தலின் போது தேர்தல் வாக்குறுதியாக அருந்ததியர் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள உள் இட ஒதுக்கீடு 3விழுக்காடு அளவினை அதிகப்படுத்தி தருவதாக அறிவித்திருந்தார்கள்.

   அதன் அடிப்படையில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அருந்ததியர் உள் இடஒதுக்கீட்டின் அளவினை 3 விழுக்காட்டிலிருந்து 7 விழுக்காடாக அறிவித்திட வேண்டும் என கேட்டுக் கொள்கிறோம்.

2. மனிதன் மலத்தை மனிதரே அள்ளும் நிலையை மாற்ற நடுவன் அரசை உடனடியாக உரிய சட்ட திருத்தம் கொண்டுவருமாறு வழியுறுத்தி தமிழக சட்ட பேரவையில் தீர்மானம் நிறைவேற்றிய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு அருந்ததியர் மக்கள் சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

3. முதல் இந்திய விடுதலை போராட்ட வீரர் நெல்லை நெற்கட்டான் செவ்வயல் பாளையத்தின் மாமன்னர் ஒண்டிவீரன் நினைவு நாளான ஆகஸ்ட்20 அன்று அருந்ததியர் சார்பில் நடத்திய நினைவு நாளுக்கு, அங்கீகாரம் அளித்து அரசு பிரதிநிதிகளை அனுப்பிவைத்தமைக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். இவ்விழாவை அரசே தொடர்ந்து அரசு விழாவாக நடத்த வேண்டும் என்றும் நன்றியுடன் கேட்டுக் கொள்கிறோம்.

4. அருந்ததியர் உள்இடஒதுக்கீடுக்கு ஆதரவாக , இருக்கின்ற மார்க்சிய பொதுவுடமை கட்சி, இந்திய பொதுவுடமை கட்சி, மனிதநேய மக்கள் கட்சி பெரியார் திராவிடர் கழகம், தியாகி இம்மானுவேல் பேரவை, தமிழக மக்கள் புரட்சி கழகம், உள்ளிட்ட ஆதரவு தெரிவித்த சமூக அமைப்புகள் மற்றும் கட்சிகளுக்கு அருந்ததியர் மக்கள் சார்பில் தோழமையுடன் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

ஒடுக்கப்பட்டோர் விடுதலை பணியில்

அருந்ததியர் விடுதலை இயக்கம் | ஆதித்தமிழர் பேரவை

21-9-2011.

மாநில அமைப்பாளர் | நிறுவனர்

தலைமையகம் : அ – 7, சக்தி அடுக்ககம், மாவீரர் நகர், வடவள்ளி, கோவை – 641 041.
பேசி : 0422 - 2424721, 94430 - 84642 மின்னஞ்சல் : adhiyamaanperavai@gmail.com
www.aathithamizharperavai.com